| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 244/2014 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | மாணிக்கம் | நாள் | 05.08.2021 |
| தகப்பனார் பெயர் | குப்புசாமி | | |

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1ம் பிரதிவாதி எங்களுடைய ஊரைச் சார்ந்தவர் என்றால் ஆமாம். 1ம் பிரதிவாதியின் தாத்தா பெயர் செங்கமல உடையார் என்றால் எனக்கு தெரியாது. அவரும், நானும் பங்காளிகள் என்றால் இல்லை. செங்கமல உடையாரின் தகப்பனார் பெயர் சின்னு (எ) பச்சு உடையார் என்றால் எனக்கு தெரியாது. சின்னு (எ) பச்சு உடையாருக்கு செங்கமல உடையான், மாரி உடையான், நாகப்பன், பழனி உடையான் செல்வமுத்து உடையான் ஆகிய 5 மகன்கள் என்றால் ஆமாம். என்னுடைய தாத்தா பெயர் தூங்கான் (எ) பஞ்சு உடையான். என்னுடைய தாத்தாவிற்கு இரண்டு மனைவிகள் என்றால் ஆமாம். முதல் மனைவிக்கு என்னுடைய தாத்தா குப்புசாமி உடையார் மட்டும் ஒரே மகன் என்றால் பச்சியப்பன் என்ற அண்ணன் இருந்தார். அவர் இறந்துவிட்டார். இரண்டாவது மனைவிக்கு சாமியப்பன் ஒரே மகன் என்றால் ஆமாம். என்னுடன் பிறந்தவர்கள் சுந்தரி, ரத்தினம், பச்சியம்மாள் மற்றும் கோவிந்தசாமி ஆகியோர் ஆவர். என்னுடைய தாத்தாவிற்கு மொத்தம் எவ்வளவு நிலம் இருந்தது என்றால் 15 ஏக்கர் இருந்தது. என்னுடைய தகப்பனாருக்கு எவ்வளவு நிலம் பாகம் என்றால் அதில் பாதி என்னுடைய தகப்பனாருக்கு உரிமையிருந்தது. சாமியப்பனுக்கு எவ்வளவு என்றால் சரிபாதி உரிமையுள்ளது. என்னுடைய தகப்பனாருக்கு பிரிந்த பாகங்களை என்னுடைய அண்ணன், தம்பிகள் பாகம் பிரித்துக் கொண்டோமா என்றால் பாகம் பிரித்துக் கொண்டோம். பாகப்பத்திரம் உள்ளதா என்றால் வாய்மொழி பாகம் தான் ஏற்பட்டது. ஆளுக்கு 2 ஏக்கர் பிரித்துக்கொண்டோம். அதன் சர்வே எண் என்னவென்றால் 200/3. ஒரே சர்வே எண்தானா என்றால் ஆமாம். எனக்கும், என்னுடைய சகோதரர்களுக்கும் இடையே வழக்கு நடந்து வருகிறது என்றால் ஆமாம். நான் என்னுடைய அண்ணன் கோவிந்தசாமி மீது அவர் என்னுடைய பாகத்தையும் சேர்த்து அவருடைய மனைவிக்கு எழுதி வைத்துவிட்டதால் வழக்கு தாக்கல் செய்திருந்தேன். வழக்கு எண் தெரியாது. 2016ம் வருடம் தாக்கல் செய்திருந்தேன். அந்த வழக்கு நிலுவையில் உள்ளது. பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதிலுரையை

படித்துப்பார்த்துள்ளேனா என்றால் படித்துப் பார்த்துள்ளேன். பதில் வழக்குரையில் 18.03.1964 ல் 1ம் பிரதிவாதி தகப்பனார் சுப்பிரமணி சர்வே எண்.200/3 ல் 30 செண்ட் விலைக்கு வாங்கியதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் குறிப்பிட்டிருக்கலாம். ஆனால் அது பொய்யானது. அந்த ஆவணம் மேச்சேரி சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு எண்.528/1964 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்ததிலிருந்து 11 ஆண்டுகளுக்கு முன்பு தடம் குறித்து தடவழி ஒப்பந்த பத்திரம் ஏற்பட்டதாக எதிர்வழக்குரையில் கூறியுள்ளார் என்றால் தடம் கேட்டார்கள். ஆனால் கொடுக்கமாட்டோம் என கூறிவிட்டோம். அந்த ஆவணம் மேச்சேரி சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு எண்.1653/2003 என பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. பதில் வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளுக்கு மறுப்பு தெரிவித்து மறுபதில் வழக்குரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்திற்கான செக்குபந்தி என்னவென்றால் மினியப்பன், தம்பியண்ணன் நிலத்திற்கு வடக்கு, சாமியப்பன் நிலத்திற்கு கிழக்கு, செல்லமுத்து வாங்கிய நிலத்திற்கு மேற்கு, பஞ்சாயத்து ரோட்டிற்கு தெற்கு என்ற செக்குபந்தியில் உள்ளது. நான் கூறும் செக்குபந்தி தவறு எனவும், வழக்கு சொத்திற்கு கிழக்கே ரோடு உள்ளது என்றால் தவறு.

பிரதிவாதிகள் வழக்குரைஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்பட்டது.

ஒம்/-எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.